உ

பரமபதிதுணை.

வராகிமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

வ ரா கி மா லை.

கட்டளைக்கலித்துறை.

வசியம்.

இருகுழை கோமளந் தாள்புட்ப ராக மிரண்டுகண்ணும், குருமணி நீலங்கை கோமே தககங் கூர்வயிரம், திருநகை முத்துக் கனிவாய் பவளஞ் சிறந்த வல்லி, மரகத நாமந் திருமேனி யுப்பச்சை மாணிக்கமே. (க)

தரிசனம்.

தோராதவட்ட முக்கோண சட்கோணத் துலங்கு வட்டத், தீரா றிதழிட்டு ரீங்கார முள்ளிட் டிதுநடுவே, ஆராதனைசெய் தருச்சித்துப் பூசித்து அடிபணிந்தால், வாரா திராளல்ல ளேவாலை ஞான வராகியுமே. (உ)

தம்பனம்.

மெய்ச்சிரத் திற்பணி யார்மனங் காய மிகவெகுண்டு, கைச்சிரத தேந்திப் புலானிண நாறக் கடித்துதறி, வச்சிரத்தந்த முகப்பணி யாற்குத்தி வாய்கடித்துப், பச்சிரத் தங்குடிப் பானேவராகி பகைஞரையே. (௩)

மோகனம்

படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமி யன்பர் பகைஞர் தமை, அடிக்குமிருப்புத்தடிகொண்டுபேய்களவர்குருதி, குடிக்குங் குடர்கொண்டு தோண்மாலை யிட்டுக் குலாவி மன்றில், நடிக்கும்வராகி பதினாலுலகு நடுங்கிடவே. (௪)

ஆக்ருடணம்

நடுங்கா வகையன்பர் நெஞ்சினிற் புக்கவர் நண்ணலரைக், கொடுங்காளி யுண்ணக் கொடுக்குங் குருதிகள்

கொப்பளித்திட், டிடும்பாரக் கொங்கையின் மீதேயிரத்
தத் திலதமிடும், தொடுங்கார் மனோன்மணி வாராகிநீலி
தொழிலதுவே. (ரு)

உச்சாடனம்.

வேய்க்குல மன்னதிண் டோளாள் வராகிதன் மெ
ய்யன்பரை, நோய்க்குல மென்ன விடும்புசெய் வார்தலை
நொய்தழித்துப், பேய்க்குல முண்ணப் பலிகொண்டு
போட்டுப் பிணக்குடலை, நாய்க்குலங் கௌவக் கொடுப்
பாள் வராகியென் னாரணியே (சு)

பேதமாரணம்.

நாசப்படுவர் நடுங்கப்படுவர் நமன்கயிற்றால், விசப்
படுவர் வினையும் படுவரிம் மேதினியோர், ஏசப்படுவர்
யிழுக்கப்படுவரென் னேழைநெஞ்சே, வாசப்புதுமலர்த்
தோளாள் வராகியை வாழ்த்திலரே. (எ)

வசியம்.

வாலைபுவனை திரிபுரை மூன்றுமிவ் வையகத்திற்,
காலையுமாலையு முச்சிமாகவெக் காலத்துமே, ஆலயமெய்
தி வராகிதன் பாதத்தை யன்பிலுன்னி, மாலயன்றேவர்
முதலானபேர்களும் வாழ்த்துவரே. (அ)

வித்துவேடணம்.

வருத்திப் பகைத்திரென் னோடறியாமன்முன் வா
னவர்க்காய்ச், சிரித்துப் புரமெரித் தோன்வாம பாகத்
துத்தேவியெங்கள், கருத்திற்பயிலும் வராகியெம் பஞ்ச
மி கண்சிவந்தாற், பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறி
காணும் பகைத்தவர்க்கே (கூ)

மாரணம்

பாப்பட்ட செந்தமிழ்ப் பாவாணர்நின்மலர்ப் பாதந்தன்னிற், பூப்பட்டதுவும் பொறிபட்டதோநின் னையே புகழ்ந்து, கூப்பிட்டதுன்செவி கேட்கிலையோ வண்டகோளமட்டும், தீப்பட்டதோ பட்டதோ நிந்தையாளர் தெருவெங்குமே. (௧0)

சிலைமாரணம்.

எங்குமெரியக் கிளிகள்பொடிபட வெம்பகைஞர், அங்கம்பிளந்திட விண்மண்கிழிந்திட வார்த்தெழுந்து, பொங்குங்கடல்கள் கவறிடச் சூலத்தைப் போகவிட்டுச், சிங்கத்தின்மீது வருவாள்வராகி சிவசத்தியே (௧௧)

சத்துருமாரணம்.

சத்திகவுரி மகமாயி யாயியென் சத்துருவைக், குத்தியிரணக் குடலைப்பிடுங்கிக் குலாவிநின்றே, இததிசையெங்கு நடுங்கக்கிரிக ளிடிபடவே, நித்தநடித்து வருவாள்வராகியென் னெஞ்சகத்தே. (௧௨)

பூதமாரணம்.

நெஞ்சகந்தன்னி நிறைந்திருக்கின் றவ ணிர்கருணத்தி, நஞ்சணிகண்டத்தி நாராயணிதனை நம்புமெற்கு, வஞ்சனைபண்ணி மதியாதபேரை வாணுளை யுண்ணக், கொஞ்சிநடந்து வருவாள்வராகி குலதெய்வமே. (௧௩)

எதிரிமாரணம்.

மதுமாமி சந்தனைத் தின்பா ளிவளென்று மாமறையோ, ரதுவேயுதாசினஞ் செய்திடுவாரந்த வற்பர்கடங்,

கதிர்வாயடைத்திட வுள்ளங்கலங்கவடிதடித்து, விதிர்வா
ளில்வெட்டி யெறிவாள்வாராகியென் மெய்த்தெய்வமே.

தேவிஆக்ருஷணம்

ஐயுங்கிலியுமெனத்தொண்டர்போற்றவரியபச்சை,
மெய்யுங்கருணை வழிந்தோடுகின்றவிழியுமலர்க், கையும்
பிரம்புங்கபாலமுஞ்சூலமுங் கண்ணெதிரே, வையந்துதி
க்கவருவாள்வாராகி மலர்க்கொடியே. (கரு)

சத்துருமாரணம்.

தாளுமனமுந் தலையுங்குலையத்தரியலர்கள், மாளும்
படிக்கு வரந்தருவாயுன்னை வாழ்த்துமன்பர், கோளும்ப
கையுங்குறியார்கள்வெற்றி குறித்தசங்கும், வாளுங்கட
கமுஞ்சூலமுமேந்தி வருந்துணையே. (கசா)

லோகமாரணம்.

வருந்துணைஎன்று வருகிஎன்றன்னையைவாழ்த்திநி
த்தம், பொருந்துந்தகமையையூணுமவர்தம்புலாலுடலைப்,
பருந்துங்கழுகும்வெம்பூதமும்வெய்யபசாசுகளும், விருந்
துண்ணப்பட்டுக்கிடப்பர்கண்டாயுடல்வேறுபட்டே. ()

ஏவல்சத்துருமாரணம்.

வேறுக்குநெஞ்சம் வினையும்வெவ்வேறு வெருண்டு
டலம், கூறுக்குநெஞ்சத்திற் செந்நிறமாண குருதிபொங்
கச், சேறுக்குங்குங்குமக் கொங்கையிற்பூசுந் திலகமிடும்,
மாறுக்குநேமிப்படையாடனை வணங் காதவர்க்கே. (கஅ)

மிருகமாரணம்.

பாடகச்சீரடிப் பஞ்சமியன்பர்பகைஞர்தமை, ஓட
விட்டேகை யுலக்கைகொண்டேற்றி யுதிரமெல்லாம்,

கோடகத்திட்டு வடித்தெடுத்தூற்றிக் குடிக்குமெங்கள், ஆடகக்கும்பவிணைக்கொங்கையாளெங்க ளம்பிகையே. ()

பாவமரணம்.

தாமக்குழலுங் குழையும்பொன்னோலையுந்தாமரைப்பூஞ், சேமக்கழலுந் துதிக்கவந்தேற்குச் செகமதனில், தாமக்கரளக் களத்தம்மையாதி வராகிவந்து, தீமைப்பவத்தைக்கெடுத் தாண்டுகொள்வள் சிவசத்தியே. (உ0)

சத்துருமாரணம்.

ஆராகிலுநமக்கேவிணைசெய்யினவருடலம், கூறுகும் வாளுக்கிரையிடுவான்கொன்றைவேணியரன், சீரார்மகுடத் தடியிணைச்சேர்க்குந் திரிபுரையாள், வாராகிவந்து குடியிருந்தாளென்னை வாழ்விக்கவே. (உக)

பசாசுமாரணம்.

தரிப்பாள்கலப்பையென் னம்மைவராகியென் சத்துருவைப், பொரிப்பாள்பொறியெழச்செந்தீயிலிட்டுப்பொரிந்ததலை, நெரிப்பாடலைமண்டைமூளையைத்தின் றுபின்நெட்டுடலை, உரிப்பாள்படுக்க விரிப்பாள்சுக்காக வுலர்த்துவளே. (உஉ)

எதிரிமாரணம்.

ஊராகிலுமூடனுடாகிலுமவர்க்குற்றவரோ, டாராகிலுநமக் காற்றுவரோவட லாழியுண்டு, காரார்கனத்தவுலக்கையுமுண்டு கலப்பையுண்டு, வாராகியென்னுஞ்சண்டப்ரசண்ட வடிவியுண்டே. (உங)

சேனைமாரணம்.

உலக்கைகலப்பைவொளிவிடுவாள்கட காழிசங்கம்,
வலக்கையிடக்கையில்வைத்துவைராகியென்மாற்லர்கள்,
இலக்கமில்லாத வெழில்பெருஞ்சேனை யெதிர்வரினும்,
விலக்கவல்லாளொரு மெல்லிதன்பாதம் விரும்புகவே ()

சத்துருமாரணம்.

கஞ்சமுன்பாதஞ்சரணுகதியென்று சார்ந்தவர்மேல், வஞ்சனைபில்லி கொடிஏவல்சூனியம் வைத்தவரை, நெஞ்சம்பிளந்து நிணக்குடல்வாங்கி நெருப்பினிலிட், டஞ்சக்கரங்கொண் டறுப்பாள்திரிபுரை யானந்தியே. ()

ஆலைபட்டுநெஞ்சமலைந்துயிர்சோரவலகைகையால், கொலைபட்டுடலங்கழுகுகள்சூழக் குருதிபொங்கித், தலைகெட்டவயம் வேருய்ப்பதைபுற்றுச் சாவர்கண்டீர், நிலைபெற்றநேமிப் படையாடனை நினையாதவரே. (உசு)

பகைவர்மாரணம்.

சிந்தைதெளிந்துனை வாழ்த்திப்பணிந்து தினந்துதித்தே, அந்திபகலுன்னை யர்ச்சித்தபேரை யசங்கிதமாய், நிந்தனைபண்ணி மதியாதலுத்தர் நிணமருந்திப், புந்திமகிழ்ந்துவருவாய்வராகிநற் பொற்கொடியே. (உஎ)

படைமாரணம்

பொருப்புக்குமாறுசெய் யாழியுந்தோடும்பொருப்பையென்ற, மருப்புக்குநேர்சொலுங் கொங்கையுமேனியும்வாழ்த்துமென, திருப்புக்கடியமனத்திற் குடிகொண் டெதிர்த்தவர்க்கு, நெருப்புக்குவாலெனக் கொல்வாய் வராகியென் னிர்க்குணியே. (உஅ)

மோகனமாரணம்.

சீறிட்டநின்மலர்ப் பாதாரவிந்தத்தைச் சிந்தைசெய்ய, நீறிட்டவர்க்கு வினைவருமோநின் னடியவர்பால், மாறிட்டவர்தமை வாளாயுதங்கொண்டு வாட்டியிரு, கூறிட்டெறிய வருவாய்வராகி குலதெய்வமே. (உக)

உச்சாடனம்.

நரிபரியாக்கிய சம்புவின்பாகத்தை நண்ணியமான், அரியயன்போற்று மபிராமிதன்னடி யார்க்குமுன்னே, சரியாகநின்று தருக்கஞ்செய்மூடர் தலையை வெட்டி, யெரியாயெரித்து விடுவாள்வராகி யெனுந்தெய்வமே. ()

விற்றிருப்பாணவ கோணத்திலே நம்மை வேண்டுமென்று, காத்திருப்பாள்கலி வந்தணுகாமலென் கண்கலக்கம், பார்த்திருப்பாளல்ல வெங்கேயென்றங்குச பாசங்கையில், கோத்திருப்பாளிவ ளேயென்னையாளுங் குலதெய்வமே. (ஙக)

சிவஞானபோதகி செங்கைக்கபாலி திகம்பரநற், பவமாகுமெய்யன்பர்க் கேயிடர்சூழ நதரியலரை, அவமானஞ்செய்யக் கண்களேயேவு மகோரியிங்கு, நவமாகவந்தெனைக் காக்குந்திரிபுர நாயகியே. (ஙஉ)

வராகிமாலை முற்றிற்று.

—(*)—

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி,

பார்த்தசாரதி மாலை.

கடவுள் வணக்கம்.

வெண்பா.

திருவல்லிக்கேணிவளர் ஜெயபார்த்த சாரதிமேல்
பருநல்லநீதிதமிழ் பாடுதற்கு—குருவல்லி
தருணமிதுகாக்கச் சௌரி தமிழ்விளங்கக்
கருணைபுரி வேங்கடத்தான் காப்பு.

நான்முகம்.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

ஒருவனே தெய்வமல்லால் வேறேயில்லை உயிரெல்லாம் ஒன்றுமே யுற்றுப்பார்த்தால், கருவிடமே விற்று முத லுலகமாச்சு கதிரவனல் வுலகமெலாம் விளங்கி நிற்கும், உருவான நவக்கிரக மிருபத்தேழு னுள்ளபடி நடக்குமல்லால்வேறேயில்லைப், பரிமளமே திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (க)

ஈயாமல் வாழ்ந்தாலும் சுகமுமில்லை இவ்விடத்தை விடவேறே யிடமுமில்லை, வோயாமற் பொய்யுரைத் தாற் சுகமுமில்லை யூருடனே பகைத்தாலும் உயிர்க்குச் சேதம், தியாக முளுமினி வனித்தியத்திற் றெளிந்தோ ரைச் சார்ந்திடிலோ வணுகிடாது, பாயாருந் திருவல்லி க்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

பெருமைபடைத் தோர்க்குவரும் பகையுமில்லைப் பொய்யுரையா மாந்தர்கட்குப் பாவமில்லை, யறிவுடனே நடப்பவர்கட் கெட்சியில்லை யடங்கிநின்ற மானவற்கு நிந்தையில்லை, மறுமுகத்தைப் பாராற்கு வினையுமில்லை, பருவமுள்ள திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசார தியைப் பணிகுவாயே. (௩)

கொண்டவனை மதியாமற் பேசும்பெண்டு குடிக்கி யெமனவனை விட வேறேயில்லை, பெண்டிரண்டு கொண் டாலுஞ் சுகமுமில்லை பெருநெருப்புச் சாகளவுந் துக்கந் துக்கம், அண்டிநின்ற விடமதனில் மோசஞ்செய்தால் ஆயுசுள்ளவரைக்குமவ ரலைவாரப்பா, பண்டுமறை திரு வல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. (௪)

அரியதனைப் பணியாத ஜென்மமெல்லா மவலமதே எடுத்ததினம் பூமிபாரம், மருவுமன்பர் தனக்கிடாரந்

துரோகஞ்செய்தால் மறுபடியுங் கடைத்தேற மார்க்க மில்லை, வுறுகிமிக வுறவாடு மோசக்கார ருற்றதுணையெ ன்றவரை நம்பொணாது, பரவிவளர் திருவல்லிக் கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ரு)

உதயத்தின் வெய்யதனிற் காயும்பேரு முத்தமரை க்கண்டுதுதி யாதபேரும், மதியகன்று மூத்தவளைச்சேர் ந்தபேரு மன்னுசுடலைப்புகையி னின்றபேரு, மதிகாலிற் பாலன்ன முண்டபேரு மாயுள்விர்த்தி யின்றுமிகக்குறை ந்துபோவார், பதியான திருவல்லிக் கேணிவாழும் பார் த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (சு)

சந்திகா லத்தில்வெய்யிற் காயும்பேருஞ் சற்குண ரைக் கண்டுதுதி செய்தபேரும், அந்தமிகு மில்லாளைச் சேர்ந்தபேரு மன்னிரவிற் பாலன்ன முண்டபேருஞ், சிந்தைமகி ழோமபுகை பட்டபேருஞ் சிரஞ்சீவி யாயுல கில் விர்த்தியாவார், பந்தமுறுந் திருவல்லிக் கேணிவா ழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (எ)

வலிமையுள னேழைபொருள் பறிக்கொணாது வழ க்கிருக்க வழக்கொன்றும் பேசொணாது, யெளியானை யெதிரிட்டுக் கொள்ளொணாது யேற்பவரை யுதாசின மாய்ப் பேசொணாது, சலியாத தூர்த்தர்களைச் சேரொ

ணாது சற்குருவின் வாய்மொழியைத் தள்ளொணாது; பலிதலருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசார தியைப் பணிகுவாயே. (அ)

அங்காடி கூடைகளைப் பறத்துத்தின்று லதனைவிட தரித்திரங்கள் வேறேயில்லை, சங்கையில்லா திருந்தாலு ஞ் சபையினின்று சத்தியங்களொருபோதும் செய்யொ ணாது, தன்கணக்கைப் பெயர்த்தெழுதி மோசஞ்செய் தால் சாகளவுஞ் சுகமில்லை யலைவாரப்பா, பங்கில்வளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கூ)

புருஷனிலாப் பூவைகுடிவாட்கை செய்தாற் புவி யிலப கீர்த்தியொடு நிந்தையுண்டாம், புருஷருக்கும்புரு டருடன் கலந்துவாழ்ந்தாற் கலக்கமது வந்தாலுங் கமறி ப்போகும், ரோஷமதை யடக்காம லோங்கும்பெண்கள் உலகதனில் பட்டியெனும் வேசையாவார், பரிட்சையுட ன்திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கo)

முந்நாளிலிரணியன் ராவணனுமற்ற மூர்க்கரெலா ங் கெர்வமதால் முழுகிப்போனு, ரந்நாளிற் சிசுபாலன் சகடன்கஞ்ச னழிந்தார்க ளவரவர்க ளகந்தையாலே,

தன்னாலே தானழிந்தான் பத்மாசூரன் தரணியிலே யின்னமுண்டு வனந்தம்பேர்கள், பன்னுமறை திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

அரியதமிழ் போதித்து முதவிசெய்து அன்புடனே மர்மமெலா மறிந்துசொன்ன, குருவையினி வஞ்சித்து துரோகஞ்செய்தாற் குறையாத பிணிவறுமைக் குடியாய்நிற்குந், தருதனைய பெரியோர்க ளுளத்தைக் காணச் சதாசிவத்தா லருமையெனச் சாற்றலாகும், பருவமதி திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கஉ)

சாந்தகுண பெரியோரைச் சேர்ந்தபேர்க்குச் சஞ்சலமும் வினைபிணியு மணுகிடாது, தாழ்ந்துவிதி கெட்டனென்று காலில்வீழ்ந்தாற் றள்ளிவிடப்போகாது தருமமல்ல, சேர்ந்திருந்த குடிவாழ்வைக் கலைத்தபேர்கள் ஜெகமதனி லலைவார்கள் பாசமாக, பாங்குடைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கங)

கண்டபடி திரிந்தாலுஞ் சுகமிராது காமத்தை யிச்சித்தால் வினைவிடாது, முண்டைகளைச் சேர்ந்தாலும் பௌஷிராது முன்கோப நாய்களுக்குத் துணையிராது, சண்டைமுனை நிற்பார்க்கு வுயிர்நில்லாது சண்டிகளுக்கொருபோதுஞ் சுகமிராது; பண்டிதமாய்த் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

அன்னதா னந்தவிரத் தானமில்லை, ஹரிநாமம்விட வேறே மந்திரமில்லை, சொன்னவஷ்டா க்ஷரமொழியே மோக்ஷமாகுந் துணையாக வாழ்வார்கள் முகுந்தராவார், தன்னிடத்திற் பொறுமையுற்றால் தருமனாவார் தைரிய புருடனே தனஞ்செயனேயாவார், பன்னுமறை திருவல் லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே (கரு)

பொருடேடி யுண்ணுமற் புதைத்து வைத்தாற் பொருள்காக்கும் பசாசுமெனச் சொல்லலாகும், இருள டர்ந்த மூடருக்கு வாழ்விராது யிதக்கமிலாக் கண்டகற் குச் சுகமிராது, மருள்பிடித்த காமுகற்கு வினைவிடாது மார்க்கமறு நடப்பவர்க்கு வின்பமிராது, பருவமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (கசு)

மதியாதார் வாசல்வழி மிதிக்கலாமோ மனமில்லா விடத்திலன்னம் புசிக்கலாமோ, சதிசெய்யுந் துரோகிக ளைச் சேரலாமோ தமயனையு மனம்நோகப்பேசலாமோ, வதிதிகளை யுதாசினமாய்ச் சொல்லலாமோ வரசரது பொருள்கவர்ந்து வலையலாமோ, பதியான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

கொள்ளையிடுங் கள்ளருடன் கூடலாமோ குடியரு டன்உறவாடி யிருக்கலாமோ, அள்ளியிடம் பிச்சைதனை விலக்கலாமோ அசலுடைமைக் காசைபட்டு அலையலா மோ, பெண்டுபிள்ளை பொருண்மனையு நம்பலாமோ புவி

யில்வெகு வுபாயமதாய்ப் பிழைக்கவேணும், பள்ளுதமிழ்த் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கஅ)

மனமறிந்து பொய்சொன்ன லட்டாபாவி வாழ்வதென்ன வதனலே மகிட்சியென்ன, வனுசரிப்பானேசர்கட்கு துரோகஞ்செய்தா லாடுபண்ணிக் கோழியைப்போ லழிந்துபோவார், தனதான குடித்தனத்தைக் கலைத்தபேர்கள் சாகளவு மலேவார்கள் பாசமாக, பணிவான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (கக)

வஞ்சகமே யனுதினமுஞ் செய்துவந்து வாழ்வதனற் பலனென்ன மகிழ்ச்சியென்ன, கொஞ்சமென்றுவெண்ணுத பாவிநெஞ்சே கொடிதான நரகத்தி லழியப்போருய், தஞ்சமென்று நல்லோரைச் சேர்வாயாகில் சகலகலை ஞானமது தரிக்கச்செய்வார், பஞ்சநதி திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உ0)

நல்லவர்க்குக் கோபமில்லை பெருமையில்லை நற்கதிக்குச் சமயமிது மோட்சமுண்டு, வல்லவர்க்குத் தற்குணமே பூஷணங்களாகும் வையகத்திலவர்பெருமை சிரிக்கலாகுஞ், சொல்லினுமோ வவர்கள்குணம் வேறதாகுஞ் சோதித்தா னல்லோரால் காணலாகும்; பல்லுயிர்களேத்துமல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே. (உக)

உத்தமர்போல் வேதாந்தம் பேசிப்பேசி யுறுதியுள ர்போல்பூசை செய்யலாகும், கற்றறிமோ ழைகளிவுருத் ராட்சபூனை கலியுகத்தி லிவர்கள்சில வேஷக்காரர், சித்தி யுள புனிதருக்கு வெறிதானுண்டு திக்கெங்குந்திரிவார் கள் பேயனைப்போற்; பத்திவளர் திருவல்லிக் கேணிவா ழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உ௨)

வாக்கியமே பெரியோர்சொல் வேதமாகும் வரிசை முறை தள்ளாதவரே யோக்யமாகும், யோக்யமுட னட ப்பவரே மறையோராவர் உதவிசெய்யும் புண்ணியரே தெய்வமாவர், யோக்யமுடன் புசித்தென்னயீயாப்பாவி பிணமதனுக் கிடுபிண்ட சாதமாகும், பாக்கியமே திருவ ல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. (உ௩)

குளித்தென்ன குழைத்தென்ன பூசித்தென்ன கும் பிட்டுக்கண்மூடி ஜெபித்தாலென்ன, களிப்புறவே கேட் பவருக் கீயவேணுங் கருத்தை நிலைநிறுத்தி மெய்யைக் காணவேணும், வொளித்திருந்து பேசுகின்றபாவிகட்கு வொருபோதுஞ் சுகமில்லை யொழிந்தநெஞ்சே, பளிங்க னைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (உ௪)

பார்த்தசாரதிமாலை,

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீரஸ்து.



ஸ்ரீநாம ராமாயணம்.

பாலகாண்டம்.

1 ஸுத்தப்பிரம்மபராத்பரராம்

2 காலாத்மகபரமேஸ்பரராம்

3 சேஷதல்பஸுகநித்ரிதராம்

4 ப்ரஹ்மாத்யமரப்பராதிதராம்

5 சண்டகிரணகுலமண்டனராம்

6 ஸ்ரீமத்தஸரதநந்தனராம்

7 கௌஸல்யாஸுகவர்த்தனராம்

8 விஸ்வாமித்ரப்ரியதநராம்
9 கோரதாடகாகா தகராம்
10 மாரீசாதிநிபாதகராம்
11 கௌஸிகமகஸம்ரட்சகராம்
12 ஸ்ரீமதஹல்யோத்தாரகராம்
13 கௌதமமுநிசம்பூஜிதராம்
14 ஸுரமுனிவரகணஸம்ஸ்துதராம்
15 நாவிகதாபிதம்ருதபதராம்
16 மிதிலாபுரஜநமோஹிதராம்
17 விதேஹமாநஸாஞ்சகராம்
18 திரியம்பககார்முகபஞ்சகராம்
19 ஸீதார்பிதவரமாலிகராம்
20 க்ருதவைவாஹிககௌதுகராம்
21 பார்கவதர்பவிநாஸகராம்
22 ஸ்ரீமதயோத்யாநநதகராம்

அயோத்தியாகாண்டம்.

23 அகணிதகுணகண பூஷிதராம்
24 அவநீகாமிநீகாமிதராம்
25 ராகாசந்திரஸமாநநராம்
26 பித்ருவாக்யஸ்ரீ தகாநநராம்
27 ப்ரியகுஹவிநிவேஸிதபதராம்.

28 தத்க்ஷாளிதநிஜம்ருதுபதராம்
29 பரத்வாஜத்ருகாநந்தநராம்
30 சித்ரகூடாத்ரிநிகேதநராம்
31 தஸரதஸந்ததசிந்திதராம்
32 கைகேயீஸுதபிரார்திதராம்
33 விரசிதநிஜபித்ருகர்மகராம்
34 பரதார்பிதநிஜபாதுகராம்
35 தண்டகாவநஜநபாவநராம்

ஆரண்யகாண்டம்.

36 துஷ்டவிராதவிநாஸநராம்
37 ஸரபங்கஸுதீக்ஷ்ணார்சிதராம்
38 அகஸ்த்யாநுக்கிரஹவர்திதராம்
39 க்ருத்ராதிபஸம்ஸேவிதராம்
40 பஞ்சவடீதடஸுஸ்திதராம்
41 சூர்ப்பணகார்திவிதாயகராம்
42 கரதூஷணமுகஸூதகராம்
43 ஸீதாபிரியஹரிணாநுகராம்
44 மாரீசார்த்திக்ருதாஸுகராம்
45 விநஷ்டஸீதாந்வேஷகராம்
46 க்ருத்ராதிபகதிதாயகராம்

47 ஸபரீதத்தபலாஸநராம்

48 கபந்தபாஹுச்சேதனராம்

கிஷ்கிந்தாகாண்டம்.

49 ஹனுமத்ஸேவிதநிஜபதராம்

50 நதஸுக்ரீவாபீஷ்டதராம்

51 கர்விதவாலிஸம்ஹாரகராம்

52 வாநரதூதப்ரேஷகராம்

53 ஹிதகரலக்ஷ்மணஸம்யுதராம்

ஸுந்தரகாண்டம்.

54 கபிவரஸந்ததஸம்ஸ்ம்ருதராம்

55 தத்கதிவிக்நத்வம்ஸகராம்

56 ஸீதாப்ராணாதாரகராம்

57 துஷ்டதஸாநநதூஷிதராம்

58 ஸிஷ்டஹநூமத்பூஷிதராம்

59 ஸீதோதிதகாகாவநராம்

60 க்ருதசூடாமணிதர்ஸநராம்

61 கபிவரவசநாஸ்வாஸிதராம்

யுத்தகாண்டம்.

62 ராவணநிதநப்ரஸ்திதராம்

63 வாநரஸைந்யஸமாவ்ருதராம்

64 ஸோஷிதஸரித்ஸார்திதராம்
65 விபீஷணாபயதாயகராம்
66 பர்வதஸேதுநிபந்தகராம்
67 கடகர்ணஸிரஸ்சேதகராம்
68 ராட்சசகோடிவிமர்த்தகராம்
69 அஹிமஹிராவணமாரணராம்
70 ஸம்ஹ்ருததஸமுகராவணராம்
71 விதிபவமுகஸரஸம்ஸ்துதராம்
72 கஸ்திததஸரதவீட்சிதராம்
73 ஸீதாதர்ஸநமோதிதராம்
74 அபிஷ்க்தவிபீஷணநுதராம்
75 புஷ்பகயாநாரோஹணராம்
76 பரத்வாஜாதிநிஷேவணராம்
77 பரதப்ராணப்ரியகரராம்
78 ஸாகேதபுரீபூஷணராம்
79 ஸகலஸ்வீயஸமாநதராம்
80 ரத்நலஸத்பீடஸ்திதராம்
81 பட்டாபிஷேகாலங்க்ருதராம்
82 பார்திவகுலஸம்மாநிதராம்
83 விபீஷணார்பிதரங்கதராம்
84 கீஸகுலாநுக்ரஹகராம்

85 ஸகலஜீவஸம்ரட்சகராம்
86 ஸமஸ்தலோகாதாரகராம்
87 ராமராமஜயராஜாராம்
88 ராமராமஜயஸீதாராம்.

ஹ ரி ஓ ம்.
த த் ஸ த்.

ஸ்ரீ

ஸ்ரீமத்கம்பராமாயணபிரசங்கர் சாமிநாதபிள்ளையவர்கள்
குமாரர் சேலம் காலேஜ் தமிழ்போதகராகிய
சரவணப்பிள்ளையவர்கள் இயற்றிய

ஸ்ரீராமநாம ராமாயணம்

---

1 ராமகாமசுர வந்திதராம்
ரவிகுலஜலநிதி சந்திரராம்
2 சாகேதஸ்தலம் வந்தவராம்
தசரதர்கோசலை தந்தவராம்
3 விசுவாமித்திரர்பின் சென்றவராம்
மேவுதாடகையைக் கொன்றவராம்

4 அகலிகைசாப முடித்தவராம்
அரியதோர்சாப மொடித்தவராம்

5 பாவைசீதைமனங் கொண்டவராம்
பரசுராமன்வலி கண்டவராம்

6 தாய்மொழிப்படிவனம் புகுந்தவராம்
சாருங்குகன்பாலன்பு மிகுந்தவராம்

7 பரதர்க்குப்பாதுக மீந்தவராம்
பரவுதண்டகவனஞ் சேர்ந்தவராம்

8 முனிவர்களுக்கபய மளித்தவராம்
முனிவர்புகழக்கண்டு களித்தவராம்

9 சூர்ப்பநகைக்குமயல் கொடுத்தவராம்
தோன்றுங்கரன்படையைக் கெடுத்தவராம்

10 மாயமானின்பின்னே ஓடினராம்
வைதேகியைப்பிரிந்து தேடினராம்

11 சவரிக்குத்தன்பதந் தந்தவராம்
சாருமநுவனை யுகந்தவராம்

12 சூரனும்வாலியை வாட்டினராம்
சுக்ரீவனைமுடி சூட்டினராம்

13 அநுமனைச்சீதைபால் விடுத்தவராம்
அடையாளமுங்கையிற் கொடுத்தவராம்

14 தேவிசூடாமணி பெற்றவராம்
தென்சமுத்திரக்கரை யுற்றவராம்

15 சரணம்விபீஷணர்க் கிந்தவராம்
சமுத்திரமணைகட்டிப் போர்ந்தவராம்
16 ராவணாதியரைக் கொன்றவராம்
ராட்சசர்முதலற வென்றவராம்
17 அம்மையைச்சிறைவிட்டு நீக்கினராம்
அவள்பெருமையைவெளி யாக்கினராம்
18 விடணனுக்குமுடி புனைந்தவராம்
மேவுமயோத்திசெல்ல நினைந்தவராம்
19 சேதுவிற்பூசனை செய்தவராம்
சேரவரக்கர்பழி கொய்தவராம்
20 புஷ்பகமீதினிற் போனவராம்
புண்யமுனிவர்விருந் தானவராம்
21 அநுமனைபரதன்பால் விடுத்தவராம்
அவனுயிரழியாமற் றடுத்தவராம்
22 காமரயோத்தியின் மீண்டவராம்
கைகேசிமலர்ப்பதம் பூண்டவராம்
23 மகிழ்ச்சியெவரும்பெறக் கண்டவராம்
மகுடாபிஷேகங் கொண்டவராம்
24 குவலயரட்சணை புரிபவராம்
கோதண்டதீக்ஷா குருவரராம்.

ஸ்ரீராமநாம ராமாயணம்

முற்றிற்று.